# இறையியல்:
# ஓர் இறை அனுபவ அறிவியல்



யோ. கி. போல் றொகான்

**இறையியல்: ஓர் இறை அனுபவ அறிவியல்**

| | |
|---|---|
| ஆசிரியர்: | அருட்கலாநிதி யோ.கி. போல் றொகான் |
| மொழி: | தமிழ் |
| விடயம்: | இறையியல், கிறிஸ்தவ வரலாறு |
| முதற் பதிப்பு: | *2021* |
| பக்கங்கள்: | xv + 114 |
| வெளியீடு: | நல்லாயன் நிலையம்<br>(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்), திருநெல்வேலி |
| உரிமை: | வெளியீட்டாருக்கு |
| அச்சகம்: | ஜே. எஸ். அச்சகம், பண்டத்தரிப்பு |
| விலை: | ரூபா *300/-* |
| ISBN: | 978-624-96945-3-8 |

**Theology: A Science of God-experience**

| | |
|---|---|
| Author: | Rev. Dr. J.C. Paul Rohan |
| Language: | Tamil |
| Subject: | Theology, History of Christianity |
| First Publication: | 2021 |
| Pages: | xv + 114 |
| Publisher: | Good Shepherd Centre<br>(Catholic Chaplaincy of the University of Jaffna)<br>Thirunelvely |
| Copy Right: | To the Publisher |
| Printer: | J.S. Printers, Pandatharippu |
| Price: | Rs. 300/- |
| ISBN: | 978-624-96945-3-8 |

# முகவுரை

இறையியல் என்ற சொல் கல்வி மற்றும் சமயப்புலங்களில் பல்வேறு கருத்துக்களில் எடுத்தாளப்படுகின்றது. கிறிஸ்துவுக்கு முன்னரான, வரலாற்றுக்கு முந்தைய கிரேக்க ஞானிகள் தொடக்கம் இன்றுவரை நீண்ட நூற்றாண்டுகளாக இச்சொல் சமயப் பெரியார்களாலும், ஞானிகளாலும், மெய்யியலாளர்களாலும், சமூகவியலாளர்களாலும், விஞ்ஞானிகளாலும் வெவ்வேறு நிலைகளிலும், அர்த்தங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மனிதச் சிந்தனை மையங்கள் வரலாற்றின் போக்குகளில் மாற்றமடைந்து வந்திருந்தாலும், வரலாற்றின் எல்லாக் காலகட்டங்களிலும் இறையியலானது ஒரு வாழும் செல்நெறியாகத் தன்னை இனங்காட்டியுள்ளது. இவ்வாறு இறையியலானது ஒவ்வொரு காலத்தினுடைய சிந்தனை மரபுகளுக்கேற்பத் தன்னைத் தகவமைத்து, அக்கால சமய, சமூக, அரசியல் போக்குகளுக்கேற்பப் பரிணாமமுற்றுப் புதிய கண்ணோட்டங்களையும், கருத்துக்களையும், விளக்கங்களையும் உள்வாங்கிக் கல்விப்புலங்களிலும், சமய நிலைகளிலும் நின்று நிலைத்துள்ளது.

இறையியல் என்பது அடிப்படையில் கடவுள் பற்றிய ஒரு கற்கைநெறியாகும். ஆனால் இறையியல் பற்றிய ஒரு விசாலமான கண்ணோட்டத்தின் அடிப்படையில் அது கடவுள் பற்றிய ஒரு கற்கைநெறி மட்டுமல்ல என்பது புலப்படும். அதேவேளை இறையியலை ஒரு கற்கைநெறியாக மட்டும் வரையறுத்துக் கொள்வதுகூட ஒரு குறுகிய பார்வையே என்பதும் புலப்படும். ஆகவே இறையியல் என்பது உடனடி அர்த்தத்தில் கடவுள் பற்றிய கற்கைநெறியாக அமைந்தாலும் அது கடவுள் மட்டும் பற்றிய ஒரு கற்கைநெறியல்ல. அதேவேளை அதனை ஒரு கற்கைநெறி மட்டுமே என்றும் வரையறுத்துக் கூறிவிட இயலாது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இறையியலில் ‘எது கற்கப்படுகிறது?’ என்ற வினாவுக்கு அதன் முன்னீடான ‘இறை’ என்பது பதிலாகவும், ‘யார் கற்கிறார்?’ என்ற வினாவுக்கு அதன் பின்னீடான ‘மனிதன்’ என்பது பதிலாகவும் அமைந்து இறையியற் கற்கை ஓர் ஒட்டுமொத்தப் பார்வையில் இறை - மனிதச் சங்கமமாக, ஒரு பல்துறைச் செல்நெறியாகப் பதிவு செய்யப்படுகிறது.

நவீன காலம்வரை இறையியல் என்பது கடவுள் பற்றிய கருத்துக்களும், சமயம் பற்றிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டதோர் அறிவுக்களஞ்சியம் என்று கருதப்பட்ட நிலை மானுடமையச் செல்நெறிகளின் அறிமுகத்தால் மாற்றமடைந்தது. இதனால் இறையியல் என்பது ‘இறை இயல்’ என்ற கடவுள்மைய நிலையிலிருந்து ‘இறை அனுபவ இயல்’ என்ற மனிதமையப் புரிதலாக மாறியது. இறையியல் என்பது கடவுள் மற்றும் சமயம் பற்றிய அறிவுசார்ந்த விடயங்களை மட்டும் உள்ளடக்கிய ஒரு கற்கைநெறி அல்ல. மாறாக கடவுள் மற்றும் சமயஞ்சார்பான அறிவியல் விடயங்களைக் கற்கும் மனிதனது அனுபவங்களையும் உள்ளடக்குவதாகும். இதனடிப்படையில் கடவுள், சமயம் பற்றிய கோட்பாடுகள் மற்றும் கருத்தியல்களை வெறும் அறிவுசார்ந்த நிலையில் மட்டும் புரிந்து கொள்வது இறையியல் அல்ல என்றும், அவற்றைக் கற்கும் மனிதர் தாம் வாழும் சூழமைவுகளின் பின்னணியில் கடவுளையும், சமய

விடயங்களையும் அனுபவித்துப் புரிந்து கொள்வதே இறையியல் என்றும் புரிதல் உருவாகிப் பரவலான ஏற்பினைப் பெற்றுள்ளது. இது இறையியல் பற்றி உருவான 'அழுத்த மாற்றம்' (shift of emphasis) என்றழைக்கப்படும்.

இறையியல் என்ற புரிதலில் ஏற்பட்ட இம்மாற்றம் இறையியலின் அறிவியற் தன்மையை அகற்றவில்லை. இறையியல் ஓர் அறிவியலாக, ஒரு விஞ்ஞானக் கற்கை நெறியாக கல்விப்புலத்தில் தனது இருப்பைத் தொடர்ந்தும் நிலைநிறுத்தியுள்ளது. அனால் அதன் அறிதல் பரப்புக்குள் உள்ளடங்கியிருந்த கடவுள், சமயம் ஆகியன பற்றிய அறிவுசார் விடயங்களுடன் அவற்றைக் கற்கும் மனிதனின் இருப்பியல் சூழமைவுகளும், வாழ்க்கை அனுபவங்களும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இது இறையியலை ஒரு பௌதிக அதீத அறிவுத்துறையாக அல்லாது முழுமானிடம் சார்ந்ததொரு கற்கையாக மாற்றியுள்ளது. இவ்வாறு கடவுள், சமயம், மனிதன், மனித வாழ்வுச் சூழமைவுகளான சமூக, அரசியல், பொருளாதார, கலாசார அம்சங்கள் அனைத்தும் இணைந்த ஓர் ஒருங்கிணைந்த கற்கைநெறியாக இறையியல் மாற்றமடைந்துள்ளது.

இவ்வாறு பல்பரிமாணத் தன்மைகளில் புரிந்து கொள்ளப்படும் இறையியல் பற்றிய அடிப்படையான புரிதல்கள், விளக்கங்கள், நோக்கங்கள், பரிமாணங்கள், வரலாற்றின் இருப்புநிலைகள், முறையியல்கள், அறிவியல் அணுகுமுறைகள் ஆகியனவற்றை முன்வைத்து அதனை 'இறை இயல்' என்ற நிலையில் இருந்து மனிதர் பெறும் 'இறை அனுபவ அறிவியல்' என்ற நிலைக்குக் கொணர்ந்து விளக்குவதே இந்நூலின் இலக்காகும். இதில் இறையியல் பற்றிய பாரம்பரியமான வரைவிலக்கணங்கள் மற்றும் முன்வைப்புக்களோடு சமகால மனிதமையச் சூழமைவிலிருந்து உருவாகும் இறையனுபவ இறையியலாக்க அணுகுமுறைகளும் உள்ளடங்கியுள்ளன.

***

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி அணிசெய்துள்ள அருட்கலாநிதி ஜெராட் டீ ரொசய்ரோ, O.M.I அவர்கள் குறிப்பிட்டு

சொல்லக்கூடிய ஆசியத் தமிழ் இறையியலாளர்களில் ஒருவர். ஆசிய ஆயர் மன்றங்களின் கூட்டமைப்பின் (Federation of Asian Bishops' Conferences) இறையியல் ஆலோசகராகப் பணியாற்றிய அனுபவம் உடையவர். இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள கிறிஸ்தவ உயர்கல்வி நிறுவனங்களில் மெய்யியல், இறையியல், கிறிஸ்தவக் கலாசாரத் துறைகளில் விரிவுரையாளராகவும், வளவாளராகவும் தொடர்ந்தும் பணியாற்றும் இவர் சமகாலக் கிறிஸ்தவச் சிந்தனைச் செல்நெறிகளை தமிழ் மொழி மற்றும் தமிழ்க் கலாசாரம் சார்ந்து உருவாக்குவதில் ஈடுபாட்டுடன் உழைப்பவர். தனது நீண்டகால இறையியல் உருவாக்க அனுபவத்தின் அடிப்படையில் தட்டிக்கொடுக்கும் வார்த்தைகளால் இந்நூலை அணிசெய்தமைக்காக மனமார்ந்த நன்றிகள்.

* * *

இந்நூலை பெரியகுருமடத்தில் எனது ஆசிரியையாகவும், பின்னர் என்னோடு சக ஆசிரியையாகவும் பணியாற்றிய அமரர் அருட்சகோதரி லுசில்லா கிறிஸ்தோபிள்ளை, H.F.B அவர்களுக்குச் சமர்ப்பணமாக்குவதில் நிறைவடைகின்றேன். அமரர் அருட்சகோதரி லுசில்லா கிறிஸ்தோபிள்ளை, H.F.B அவர்கள் அர்ப்பணம் நிறைந்த ஆசிரியப்பணியில் தனது வாழ்நாளை நிறைவு செய்தவர். ஆசிரியப் பணியின் எடுத்துக்காட்டான அவரின் நினைவுகளுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

**அருட்கலாநிதி யோ.கி. போல் றொகான்**
தலைவர்
கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்
இலங்கை.